நீலப்பசுமை யுகம் - பேண்தகு அபிவிருத்தி

# சுற்றாடல் சுவரொட்டி போட்டி-2017



2017 ஒக்டோபர் மாதம் 16ம் திகதியிலிருந்து 18ம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் வைபவத்திற்கு இணையாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நாடுபூராகவுமுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவினருக்காக "நீலப்பசுமை யுகம் - பேண்தகு அபிவிருத்தி" என்ற தலைப்பின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சுற்றாடல் சுவரொட்டி போட்டி மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளது.

2017 ஒக்டோபர் மாதம் 16ம் திகதியிலிருந்து 18ம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் வைபவத்திற்கு இணையாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நாடுபூராகவுமுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவினருக்காக "நீலப்பசுமை யுகம் - பேண்தகு அபிவிருத்தி" என்ற தலைப்பின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சுற்றாடல் சுவரொட்டி போட்டி மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளது.

சுவரொட்டி போட்டிக்கு பங்குபற்றுவதற்கான குறிப்பிட்ட விபரங்கள் கீழே தரபபட்டுள்ளதுடன், போட்டி நிபந்தனைகளுக்கு அமைவாக பாடசாலை மாணவர்கள் இதில் பங்குபற்ற முடியும்.

## நிபந்தனைகள்

- இப்போட்டியில் நாட்டிவுள்ள அனைத்து பாடசாலைகளும் பங்குபற்ற முடியும் மற்றும் கீழ் குறித்த தொனிப்பொருளுக்கு அமைய ஆக்கத்தை முன்வைக்கவேண்டும்.
  **"நீலப்பசுமை யுகம் - பேண்தகு அபிவிருத்தி"**



- போட்டிப்பிரிவுகள் மூன்றாகும்
  (A) 9ம் தரத்திலிருந்து 11ம் தரம் வரையான பிரிவு
  (B) 12ம் தரத்திலிருந்து 13ம் தரம் வரையான பிரிவு
  (C) திறந்த பிரிவு
- சித்திரங்களுக்கான ஊடகம் - பெஸ்டல் அல்லது திரவ சாயம்
- 20" x 16" அளவுடைய பிரிஸ்டல் போட்டை (வெள்ளை) பாவிக்கமுடியும்
- மாகாண மற்றும் தேசிய ரீதியில் 1, 2, 3 ஆகிய இடங்கள் தெரிவுசெய்யப்படும்.
- மூன்று பிரிவுகளிலும் 1, 2, 3 ம் இடங்கள் உட்பட சிறந்த படைப்புக்கள் 2017 ஒக்டோபர் மாதம் 18ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் வைபவத்திற்கு இணையாக காட்சிப்படுத்தப்படும்.
- சுவரொட்டியை அனுப்பி வைக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், சொந்த முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி, கல்வி கற்கும் தரம், போட்டிப்பிரிவு, கல்விக் கோட்டம், கல்வி வலயம், மாகாண கல்விக்காரியாலயம் மற்றும் மாவட்டம் ஆகிய விபரங்களுடன் வகுப்பாசிரியர் மற்றும் அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும். சுவரொட்டி ஆக்கங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி அல்லது அதற்கு முன்னர் இவ்விளம்பரத்தின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது நேரில் கையளிக்க வேண்டும்.
- சுவரொட்டி தொனிப்பொருளை குறிப்பதாக இருத்தல்வேண்டும்.
- தேவைஏற்படின், சிறு வாக்கியம்.׃. விபரிப்பு என்பவற்றை எழுதலாம்.
- சுவரொட்டிகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2017 ஜூன் 30 ஆகும்.

## பொது நிபந்தனைகள்ள

- இப்போட்டியின் வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பணப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- விடயத்தில் நிபுணத்துவம் கொண்ட நடுவர் குழாம் ஒன்றினால் சுவரொட்டி போட்டிக்கான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் நடுவர் குழாமின் முடிவே இறுதியானதாகும்.
- போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை றறற.உநய.டம என்ற இணையத்தள முகவரி அல்லது 011-2876642 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**சுவரொட்டிகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:**

தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை
104, பரிசர பியச,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**